# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 08.05.2026

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9875/B/2024**

திரு.R.லாபரின் ஏசு — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
முதல்வர்,
புனித யூதாக் கல்லூரி,
தூத்தூர்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629176. — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

1. இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (08.05.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.R.லாபரின் ஏசு அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.K.சூசை அருள், உதவி பேராசிரியர், புனித யூதா கல்லூரி, துத்தூர் அவர்கள் உரிய அங்கீகார கடிதத்தை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்து ஆஜரானார்.

2. மனுதாரர் 24.07.2024 தேதியன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பரிவு 19(3)-இன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீடு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (08.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 20.01.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-இன் கீழ், “Attested copy of Appointment Orders of Dr.Nicholas T, Dr.Antony M and Dr.Henry C as Principals at the St.Jude’s College, Thorthoor” உள்ளிட்டவற்றை தகலவாக வழங்க கோரி மொத்தம் 9 இனங்களில் தாக்கல் செய்த மனு மற்றும் 11.03.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-இன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீட்டு மனு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு உரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்து, அவற்றை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டார்.

4. இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர் சார்பாக ஆஜரான பிரதிநிதி, மனுதாரர் சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களை அவருக்கு இன்றைய

விசாரணையின்போது நேரில் வழங்க கொண்டுவந்து, அதன் நகலை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

5. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், மனுதாரர் சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரும் தகவல்களில் 1 முதல் 5 (A,B,C,D,E) வரையான இனங்களை மட்டும் தகவலாக வழங்கலாம் என்று இவ்வாணையம் கருதுகிறது. மேலும், மேற்படி பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி அவர்களால் மனுதாரர் சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரும் இனம் 1,3-க்கு (A,C) போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்கிறது. ஆனால், இனம் 1,3-க்கான (A,C) தகவல்களை மனுதாரர் இன்றைய விசாரணையின்போது பெற்றுக்கொள்ளாமல் சென்றுவிட்டதால் அதற்கான தகவல்களும், இனம் 2,4,5-க்கான (B,D,E) உரிய தகவல்களும் மனுதாரருக்கு வழங்க வேண்டியுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்து, கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

1. ***இவ்வாணை கிடைக்கப்பெற்ற 10 நாட்களுக்குள், மேற்படி பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி இவ்வாணையத்தின் முன்பு சமர்ப்பித்த இனம் 1,3-க்கான (A,C) தகவல்களையும், இனம் 2,4,5-க்கான (B,D,E) உரிய தகவல்களையும் மனுதாரருக்கு சட்டப்பிரிவு 7(6)-இன் கீழ் கட்டணமின்றி, முறையாக சான்றொப்பமிட்டு, ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் மனுதாரருக்கு அனுப்பி அதன் நகலையும், மனுதாரர் தகவலை பெற்றுக்கொண்டதற்கான பதிவு தபால் ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு பொதுத் தகவல் அலுவலர்/ கண்காணிப்பாளர், தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி அவர்கள் 12.06.2026-க்குள் பதிவு தபால் மற்றும் மின்னஞ்சல் (sicbsec1@gmail.com) மூலம் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***
2. ***மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவின்படி தகவல் வழங்க தவறும்பட்சத்தில் முன்னாள்/இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 9875/B/2024**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு:**

பொதுத் தகவல் அலுவலர்/
முதல்வர்,
புனித யூதாக் கல்லூரி,
தூத்தூர்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629176.

**மனுதாரர்:**

Thiru.R.Laberin Yesu,
Beth Shalon, St.Pius X Church Compound,
Kumarapuram,
Medical College Post,
Trivandrum - 695011.

Copy to: File
AK/PC